# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## சீனத்தின் சங்காயாக மாறிய சங்கானை

**பகுதி II**

**40**

வடபகுதி எங்கும் மாவோவின் 'பாதம்'. சங்கானை சீனத்தின் 'சங்காய்' ஆக மாறுகிறது. இதை அரசு உடனேதடுத்து நிறுத்த வேண்டும் என்று 'அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்' பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்குமளவுக்கு நிலைமை உக்கிரமடைந்திருந்தது.



குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சாதி அமைப்பை தகர்க்க விரும்புபவர்களுக்கும், அதைக் கட்டிக் காக்க விரும்புபவர்களுக்கும் இடையிலான 'முறுகல்நிலை' உச்சக் கட்டத்தை அடைந்திருந்த போதிலும் சங்கானையில்தான் அதன் முதல் 'வெடிப்பு' கிளம்பியது.

சங்கானைப் பகுதியில் வசித்து வந்த ஒடுக்கப்பட்ட மக்கள் நா.சண்முகதாசன் தலைமையிலான 'கம்யூனிஸ்ட் கட்சி'யினதும் அதன் முன்னணி அமைப்பான 'வாலிபர் சங்கத்தினதும்' அரசியல் அறிவூட்டல் காரணமாக விழிப்புணர்ச்சி பெற்றிருந்த அதேசமயம் - சாதி அமைப்பைக் கட்டிக் காக்க விரும்பிய மேட்டுக்குடியினரும், தங்களுடைய சுகபோக வாழ்க்கைக்கு பயன் தரக்கூடிய அந்த அமைப்பை, 'தகர்ந்து போக விடாது' பாதுகாக்க உறுதி கொண்டிருந்தனர்.

முந்திய பிறப்பில் செய்த பாவம்தான் இந்தப் பிறப்பில் குறைந்த சாதியில் பிறப்பது. இந்தப் பிறப்பில் குறைந்த சாதியில் பிறப்பவர்கள் சாதித் தர்மத்தை மீறாமல் அதாவது சாதிக்கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தால், அடுத்த பிறப்பில் உயர் சாதியில் பிறக்கலாம்...

குடாநாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே சங்கானைப் பகுதியிலும் சாதி அமைப்பானது கலாச்சார ரீதியில் மட்டுமல்லாது, பொருளாதார ரீதியிலும் தன்னுடைய சுரண்டல் வடிவத்தை 'அழுத்தி இறுக்கி' வைத்திருந்தது.

பெரும்பாலான விவசாய நிலங்களையும் பனை மரங்களையும் சொந்தமாகக் கொண்டிருந்த சாதியக் கனவான்கள், குத்தகை அதாவது 'வாரம்', அல்லது 'முறை' என்ற அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தொழில் செய்யக் கொடுத்துவிட்டு, அதன் மூலம் அவர்களது உழைப்பின் சரி அரைவாசிப் பகுதியை 'அபகரித்து' வந்தனர்.

மீதமுள்ள வருவாயைக் கொண்டு இந்த மக்கள் 'மூலதன' ரீதியாகப் பலம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக அவர்களுக்கிடையில் போட்டி பூசல்களை உருவாக்கி, கத்திவெட்டு - வாள்வெட்டு - கொலை என்று சொல்கின்ற அளவுக்கு அந்த மக்களை மோதவிட்டு, அவர்களது சேமிப்பு முழுவதாகவே இந்த மோதல்கள் உருவாக்கப்பட்டு வந்தன.

கோவிலுக்குள் சென்று இந்த மக்கள் சமத்துவமாக வழிபடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட போதிலும், கோவில் மீதான அவர்களது பிடிப்பையும் பக்தியையும் 'வளர்க்கும்' முயற்சிகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. கோவில் திருவிழாக்களில், அவர்கள் கூத்துக்கள் நடாத்துவதற்கு உற்சாகப் படுத்தப்பட்டார்கள். ஒடுக்கப்பட்ட சமூகத்திலுள்ள ஒரு பிரிவினர் கூத்து நடாத்தி விட்டால், மற்றைய பிரிவினரைப் பார்த்து, 'என்ன அவங்கள் அந்த மாதிரி கூத்துப் போட்டுவிட்டாங்கள் - நீங்கள் என்ன சும்மா இருக்கிறீங்கள்...? அவங்களை விட நீங்கள் குறைவா....?' என்று தூண்டிவிடும் முயற்சிகளும் நடந்தன.

இதனால் இரு பகுதியினரும் போட்டிக்கு 'கூத்தாட' முனைந்து இறுதியில் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு, தங்களது சேமிப்புக்களையும் காலத்தையும் விரயம் செய்யும் நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தையும், அவர்கள் நீதி மன்றத்தில் வழக்காடியே செலவழிக்கச் செய்யும் தந்திரோபாயத்தைக் கையாண்டு வந்தனர். குறிப்பாக கோவில்கள் சார்ந்த

முந்திய பிறப்பில் செய்த பாவம்தான் இந்தப் பிறப்பில் குறைந்த சாதியில் பிறப்பது. இந்தப் பிறப்பில் குறைந்த சாதியில் பிறப்பவர்கள் சாதித் தர்மத்தை மீறாமல் அதாவது சாதிக் கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தால், அடுத்த பிறப்பில் உயர் சாதியில் பிறக்கலாம் என்ற கருத்தும் திணிக்கப்பட்டது.

வீடுகளில் தேங்காய்ச் சிரட்டையில் தண்ணீர் கொடுப்பது; பனையோலைத் தட்டுவத்தில் சாப்பாடு கொடுப்பது; சாப்பாட்டுக் கடைகளில் வெளியே நிறுத்தி வைத்து போத்தல்களில் தேநீர் கொடுப்பது; தாமரை இலையில் சாப்பாடு கொடுப்பது; உயர்சாதிக்காரர்களை வீதியில் கண்டால் தோளில் துண்டை எடுக்க வேண்டும்; ஒதுங்கி நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்ற வழக்கத்தைக் கடைப்பிடிக்கச் செய்வது என்பவற்றின் மூலம் மனோவியல் ரீதியாக, அந்த மக்களுக்கு நாங்கள் எப்போதும் சேவகம் செய்யப் பிறந்தவர்கள். எங்களுக்கு, மற்றவர்களுக்குச் சமமாக வாழும் உரிமையில்லை என்கின்ற தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

வீடுகளில் தேங்காய்ச் சிரட்டையில் தண்ணீர் கொடுப்பது; பனையோலைத் தட்டுவத்தில் சாப்பாடு கொடுப்பது; சாப்பாட்டுக் கடைகளில் வெளியே நிறுத்தி வைத்து போத்தல்களில் தேநீர் கொடுப்பது; தாமரை இலையில் சாப்பாடு கொடுப்பது; உயர்சாதிக்காரர்களை வீதியில் கண்டால் தோளில் துண்டை எடுக்க வேண்டும்; ஒதுங்கி நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்ற வழக்கத்தைக் கடைப்பிடிக்கச் செய்வது என்பவற்றின் மூலம் மனோவியல் ரீதியாக, அந்த மக்களுக்கு நாங்கள் எப்போதும் சேவகம் செய்யப் பிறந்தவர்கள். எங்களுக்கு, மற்றவர்களுக்குச சமமாக வாழும் உரிமையில்லை என்கின்ற தாழ்வு மனப்பான்மையை 'வளர்க்கும்' முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சங்கானைப் பகுதியில் குறிப்பாக நிற்சாமம் பகுதியில் 'ஒடுக்கப்பட்ட மக்கள்' ஒரு கிராமம் என்ற அடிப்படையில் பெரும்பான்மையினராக வாழ்ந்தபடியினாலும், நா. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியினர் அந்தக் கிராமத்தில் அதிகளவிற்கு வேலை செய்ததாலும் அந்த மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டது. இந்த விழிப்புணர்வு, ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் சாதிய வெறியர்களுக்கு எதிராக வேற்றுமைகளை மறந்து அவர்களை ஒன்றுசேர வைத்தது.

இதனால் - கருத்தியல் ரீதியாக அவர்கள் மத்தியில் ஊட்டப்பட்டிருந்த பிற்போக்கு கருத்துக்களில் இருந்தும் அவர்கள் படிப்படியாக 'விடுபட' ஆரம்பித்தனர். மற்றவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்து வாழ்வதை விடுத்து, மற்றவர்களிடம் கையேந்தி நிற்பதை விடுத்து, தாங்களே தங்களது சொந்தக் காலில் நிற்பதற்கும்; தங்களது சமூகத்தேவைகளை தங்களது சுய முயற்சியாலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கும் அம்மக்கள் முற்பட்டனர்.

இது, காலாகாலமாக அவர்களை சாதியின் பேரால் அடக்கி ஒடுக்கி வைத்து சுரண்டி வந்த 'சாதி வெறியர்களுக்கு' ஆத்திரத்தை உண்டாக்கியது. அவர்கள் அந்தக் கிராமத்தை சகல வகைகளிலும் புறக்கணித்து அந்த மக்களை அடிபணிய வைக்க முனைந்தனர்.

தேநீர்க்கடை பிரவேசம் ஒன்றுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையைக் 'காரணமாக' வைத்து, சாதி வெறியர்கள் அந்த மக்களை தாக்க ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் சாதி வெறியர்களின் இத்தகைய சிறு சிறு தாக்குதல்களைப் பொருட்படுத்தாது இருந்த அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் - தங்களது சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் சட்டை கிழிக்கப்பட்டு அவளது மார்பகத்தில் தீப்பந்தத்தால் சுடப்பட்ட சம்பவமும், அதைத் தட்டிக் கேட்கச் சென்றவருக்கு 'சிறுநீர்' பருக்கப்பட்ட சம்பவமும் நடந்தவுடன் பொறுமை இழந்து பொங்கி எழுந்தனர்.

காலா காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்டதானது, சங்கானைப் பிரதேசத்தை மட்டுமல்ல - யாழ்ப்பாணக்குடா நாட்டையே அதிர வைத்தது.

சங்கானைப் போராட்டத்தில், சாதி அமைப்பைக் 'காக்க முனைந்த' 13 தலைகள் மண்ணில் வீழ்த்தப்பட்டன.

வடபகுதி எங்கும் மாவோவின் 'பாதம்'. சங்கானை சீனத்தின் 'சங்காய்' ஆக மாறுகிறது. இதை அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும் என்று 'அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்' பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்குமளவுக்கு நிலைமை உக்கிரமடைந்திருந்தது.

**- நக்கீரன்**

www.padippakam.com

படிப்பகம்